

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.9.2023) அவரது இல்லத்தில், கலைஞர் டி.வி.யில் பணியாற்றுகின்ற பா. முரசொலி – சா.தனலட்சுமி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் கலைஞர் டி.வி. செய்தி ஆசிரியர் திருமாவேலன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.9.2023) முகாம் அலுவலகத்தில், விகடன் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் பா. சீனிவாசன் சந்தித்து, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 20.9.2023 அன்று விகடன் குழுமத்தின் சார்பில் நடைபெறவுள்ள "கலைஞர் 100 – விகடனும் கலைஞரும்" நூல் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். இந்நிகழ்வின்போது ஆனந்த விகடன் ஆசிரியர் தி.முருகன், பொது மேலாளர் அப்பாஸ் அலி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.9.2023) சென்னையில் நடைபெற்ற இயேசு அழைக்கிறார் அமைப்பின் தலைவர் டாக்டர் பால் தினகரன் அவர்களின் மகள் ஸ்டெல்லா ரமோலா – டேனியல் டேவிட்சன் ஆகியோரது திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறைஅமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.9.2023) முகாம் அலுவலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் சந்தித்து, தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

### மக்களவை தேர்தலில் இந்துக்கள் வாக்கைப்பெற

# அமைச்சர் உதயநிதியின் சனாதன பேச்சை எதிர்க்கும் பா.ஜ. செயல் எடுபடாது!

## புதுவை முன்னாள் முதல்வர் நாராயணசாமி பேட்டி!

புதுச்சேரி, செப். 14-

காரைக்காலில் புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி அளித்த பேட்டி: 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பது சாத்தியமானது அல்ல. இது ஜனநாயக நாட்டிற்கு ஒத்துவராது. 5 மாநில தேர்தல் தோல்வி பயத்தால், அந்த தேர்தல்களை ஒத்தி வைக்கும் வகையில் மோடி ஒரே நாடு, ஒரே தேர்தல் கருத்தை முன் வைத்து பேசுகிறார்.

இந்தியா கூட்டணி அமைந்த பிறகு, இந்தியா என்று சொல்வதற்கு பிரதமர் மோடிக்கு அச்சம் வந்து விட்டது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சனாதனம் குறித்து தமது கட்சியின் நிலைப்பாட்டை பேசியுள்ளார். அம்பேத்கர், பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் சனா தனத்தை எதிர்த்து பேசியபோது எதிர்ப்பு தெரிவிக்காமல் அமைதியாக இருந்தவர்கள், தற்போது உதயநிதி பேசியதற்கு மட்டும் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு காரணம் வரும் மக்களவை தேர்தலில் இந்துக்களின் வாக்குகளை பெற வேண்டும் என்ற திட்டத்தில் பா.ஜ. செயல்படுகிறது. பா.ஜ.வின் இந்த செயல்பாடு எடுபடாது.

'புதுவை மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. ஊழல் மலிந்து விட்டது. பொதுப் பணித்துறையில் வெளிப்படையாக 25 சதவீதம் கமிஷன் கேட்கப்படுகிறது. முதல்வர் ரங்கசாமி அலுவலகத்தில் 5 புரோக்கர்கள் செயல்படுகின்றனர். ரெஸ்ட்ரோ பாருக்கு ரூ.20 லட்சம் வாங்குகிறார் முதல்வர். உண்மை இல்லை என்றால் என் மீது நடவடிக்கை எடுக்கட்டும். கலைஞர் பெயர் என்ற காரணத்தால் காலை உணவு திட்டத்தை முன்னாள் துணைநிலை ஆளுநர் கிரண்பேடி எதிர்த்தார். இப்போது தமிழ்நாட்டை போல புதுச்சேரி அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை கொண்டு வர வேண்டும்.'

இவ்வாறு அவர் கூறினார்.


